சுருக்கம்

கல்லூரிக் கல்வி – அரசு உதவி பெறும் கல்லூரிகள் – பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் நினைவுக் கல்லூரி, கமுதி – தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (ஒழுங்காற்றுச்) சட்டம், 1976, (சட்டம் எண் 19/1976) பிரிவு 14-A-ன் படி அக்கல்லூரியை நிர்வகிக்க தனி அலுவலரை நியமனம் செய்தல் – ஆணைகள் – வெளியிடப்படுகிறது.

---

உயர் கல்வி(டி2)த் துறை

அரசாணை(நிலை)எண் 238

நாள்: 03.11.2022
சுபகிருது வருடம், ஐப்பசி–17
திருவள்ளுவராண்டு 2053

படிக்கப்பட்டவை:

1. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கடிதம் எண் 13622/ஜி2/2022, நாள் 04.05.2022.
2. அரசு கடிதம் எண் 7482/டி2/2022–2, நாள் 12.08.2022.
3. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கடிதம் எண் 13622/ஜி2/2022, நாள் 02.09.2022.

-------

ஆணை;–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், இராமநாதபுரம் மாவட்டம், கமுதியில் உள்ள பசும்பொன் திரு. முத்துராமலிங்க தேவர் நினைவுக் கல்லூரியானது ஒரு அரசு உதவி பெறும் கல்லூரி என்றும் இக்கல்லூரியானது, பசும்பொன் திரு.முத்துராமலிங்க தேவர் நினைவு பரிபாலன சபை என்னும் கல்வி முகமையால் நிர்வகிக்கப்பட்டது என்றும், 1984ஆம் ஆண்டு கல்வி முகமையிடையே எழுந்த உட்பூசல் காரணமாக நிர்வாகிகளுக்கிடையே உள்ள பிரச்சனைகள் தீரும் வரையில் கல்லூரி பணியாளர்களின் நலன் கருதி, சென்னை கல்லூரிக் கல்வி இயக்குநரின் பரிந்துரையின் பேரில் கல்வித் துறையின் 27.07.1984 நாளிட்ட அரசாணை (நிலை) எண்.1300–ன் படி இக்கல்லூரியில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களுக்கான மாத ஊதியத்தினை நேரடியாக கருவூலத்தில் பட்டியல் சமர்ப்பித்து பெற்று வழங்கிட அதிகாரம் அளிக்கப்பட்டு ஊதியம் நேரடியாக பட்டுவாடா செய்யப்பட்டு வந்த நிலையில் 02.09.1985 நாளிட்ட கல்விதுறையின் அரசாணை (நிலை) எண்.1021–ன் படி இதர 14 வகையான நிர்வாக பணிகளையும் செய்து மேற்பார்வையிடவும், மதுரை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநருக்கு அனுமதி வழங்கப்பட்டு நாளது தேதி வரையில் மதுரை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநரின் மேற்பார்வையில் கல்லூரி இயங்கி வருகிறது என்றும் கல்லூரிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

..2..

2. மேலும் கல்லூரியை நிர்வகிக்க பல்வேறு தரப்பினர் உரிமை கோரியுள்ள நிலையில், பசும்பொன் திரு.முத்துராமலிங்க தேவர் நினைவு கல்லூரிக்கு முறையான கல்லூரிக் குழு அமைய சாத்தியமில்லா நிலை உள்ளது என்றும், அரசாணை (நிலை) எண்.1021, கல்வித் துறை நாள்.02.09.1985–ன் கீழ் அரசாணையில் குறிப்பிட்டுள்ளவற்றை மட்டுமே இணை இயக்குநரால் செயல்படுத்தப்படக்கூடிய சூழலில், செம்மையாக நடைபெறும் வண்ணம் கல்லூரியின் வளர்ச்சி பணிகளை நிறைவேற்றுவதற்கு இணை இயக்குநர் நிலையில் போதிய அதிகாரம் இல்லை எனவும் எனவே கல்லூரி நிர்வாக பணிகளை முழுமையாக மேற்கொண்டு அக்கல்லூரியின் வளர்ச்சி பணிகளை மேற்கொள்ளவும் மற்றும் பிற ஏனைய பணிகளை மேற்கொள்ளவும் தனியார் கல்லூரி (ஒழுங்காற்றுச்) சட்டம் 1976 (சட்டம் எண் 19/1976), பிரிவு 14-A-ன் படி தனி அலுவலரை (Special Officer) நியமனம் செய்ய மதுரை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் பரிந்துரை செய்துள்ளார் என்றும் எனவே, கமுதி, பசும்பொன் முத்துராமலிங்க தேவர் கல்லூரிக்கு தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (ஒழுங்காற்றுச்) சட்டம்,1976 (சட்டம் எண் 19/1976)–ன் பிரிவு 14–A ஐ அமல்படுத்தி மதுரை, மண்டலக் கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அவர்களை தனி அலுவலராக நியமித்து உரிய ஆணை வழங்குமாறு கல்லூரிக் கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசுக் கடிதத்தில், தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (ஒழுங்காற்றுச்) சட்டம், 1976, (சட்டம் எண் 19/1976) பிரிவு 14–Aன்கீழ், கமுதி, பசும்பொன் முத்துராமலிங்க தேவர் கல்லூரிக்கு தனி அலுவலரை ஏன் நியமிக்கக் கூடாது என்பதற்கான காரணம் கேட்பு அறிவிப்பு (Show Cause Notice) கல்லூரிச் செயலருக்கு அனுப்பப்பட்டு அது குறித்து 15 நாட்களுக்குள் விளக்கம் அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

4. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், கமுதி, பசும்பொன் முத்துராமலிங்க தேவர் கல்லூரியில் முறையாக கல்லூரிக் குழு செயல்படாத நிலையில் அக்கல்லூரியைப் பொறுத்தமட்டில், மே 1984 முதல் செயலர் யாரும் செயல்படவில்லை எனவும் சார்ந்த கல்லூரியானது மதுரை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநரின் மேற்பார்வையில் இன்றளவும் செயல்பட்டு வருகிறது எனவும் அக்கல்லூரி முதல்வரால் (பொ) தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் கல்லூரிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

5. மேற்கண்ட கல்லூரிக் கல்வி இயக்குநரின் பரிந்துரையினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து அதனை ஏற்று கமுதி, பசும்பொன் திரு. முத்துராமலிங்கத் தேவர் நினைவுக் கல்லூரி நிருவாகம் சார்பில் அக்கல்லூரியில் நிலவும் நிருவாகச் சீர்கேடுகள் தொடர்பாக விளக்கம் ஏதும் அளிக்கப்படாத நிலையில் அக்கல்லூரிச் சார்பாக விளக்கம் அளிப்பதற்கு ஏதுமில்லை எனக் கருதி இருப்பில் உள்ள ஆவணங்களின் படியும் அக்கல்லூரியில் நிலவும் நிர்வாகச் சீர்கேடுகள் மற்றும் அசாதாரண சூழ்நிலையினை கருத்தில் கொண்டும், அக்கல்லூரியை நிருவகிக்க தமிழ்நாடு

கல்லூரிகள் (ஒழுங்காற்றுச்) சட்டம் 1976 (சட்டம் எண் 19/1976), பிரிவு 14–A–ன் படி மதுரை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநரை தனி அலுவலராக நியமனம் செய்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தா. கார்த்திகேயன்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை–15.
மண்டலக் கல்லூரிக் கல்வி இணை இயக்குநர், மதுரை
(கல்லூரிக் கல்வி இயக்குநர் வழியாக)
பதிவுத்துறைத் தலைவர், சென்னை.
மாவட்டப் பதிவாளர், மதுரை.
பசும்பொன் திரு. முத்துராமலிங்க தேவர் நினைவுக் கல்லூரி, கமுதி.
பதிவாளர், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.
நகல்
சட்டத்துறை, சென்னை–9.
மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சரின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
முதன்மைச் செயலாளரின் முதுநிலை தனி செயலர்,
உயர்கல்வித் துறை, சென்னை–9.
இகோ/உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது//

3/11/22
பிரிவு அலுவலர்
3/11/22